மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மக்கள் தொகை, வருமானம் இரண்டையும் வைத்துத்தான் நகராட்சிகள் அமைக்கப்படுவது முறையாகும். சில இடங்களில் நகராட்சியின் வருமானம் குறைவாக இருந்தால், பேரூராட்சி மன்றமாக மாற்றியமைக்க முறையீடு வந்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்வி.

முதலமைச்சரின் உடல் நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம், ஒரு நடைமுறைக் கேள்வி (பாயின்ட் ஆப் ஆர்டர்) எழுப்புவார்கள்.

***திரு. கே. விநாயகம்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு சில நாட்களாகத் தொடர்ந்து கூட்டத்திற்கு வர முடியாமல்—வேண்டுமென்றே இருக்கிறார்கள் என்று சொல்லமாட்டேன்—உடல் நலக்குறைவு காரணமாக—இருக்கிறது. ஆதலால் அவரும் வரவில்லை. நமக்கும் சுவையில்லை. நம்முடைய பட்ஜெட்டை சமர்ப்பித்தது முதல் அமைச்சர்; ஆகவே, அவர்கள் இருந்தால், அவ்வப்பொழுது குறுக்கிட்டு, அந்த அந்த நிலைகளை விளக்கம் செய்து தருவார்கள். இப்பொழுது இங்கே இருப்பவர்கள் சாமர்த்திய சாலிகள் இல்லை என்று நான் சொல்லவில்லை. திறமை உள்ளவர்கள் தான். ஆனாலும் அவர்கள் இல்லை என்றால் நமக்கெல்லாம் மெத்தக் கவலையாக இருக்கிறது. அவர்கள் விஷயத்தில் இந்த மன்றமும் என்னோடு சேரும், முழுவதுமாகச் சேரும், கட்சி வேறுபாடுகள் இன்றி—அரசியல் வேற்றுமை ஒருபுறம் இருக்கலாம், ஆனால் அவர்களுடைய ஆரோக்கியத்தில் எல்லோருக்கும் அக்கறை இருக்கிறது. அவரை நன்கு தான் பாதுகாக்கிறார்கள்; மருத்துவர்களும் கவனிக்கிறார்கள். ஆனால் நான் என்ன நினைக்கிறேன் என்றால், ஒரு "போர்டு ஆப் டாக்டர்ஸ், எக்ஸ்பர்ட் டாக்டர்ஸ்" அமைத்து, திறமையுள்ள மருத்துவர்களை, வேண்டுமென்றால் வெளி மாநிலங்களிலிருந்து கூட தருவிக்கலாம், தவறில்லை. அதற்காக இங்கே உள்ள மருத்துவர்கள் திறமை குறைந்தவர்கள் என்று குறிப்பிடவில்லை. அப்படிச் சொல்வதாக நினைக்க வேண்டாம். என்னுடைய எண்ணம், ஒரு போர்ட் ஆப் டாக்டர்ஸ் போட்டு, அவர்களுடைய உடலை நன்கு பரிசீலித்து, அவர்கள் நல்ல சுகம் அடைந்து சௌகரியமாக திரும்பவும் நம் சட்டசபையில் கலந்து கொள்ளவேண்டும். நாளைய மறுநாள் அவர்கள் பதில் சொல்ல வேண்டிய நாளாக இருப்பதால், அன்றைக்கே வந்து, அப்படி அவர்கள் வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். வெகு சீக்கிரமாக அவர்கள் வருவதற்கு ஏற்பாடுகள் இருக்கின்றனவா என்று அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா உடல் நலம்பற்றி, அவர்கள் நலம் பெறுவதற்காக வேண்டி ஒரு போர்ட் ஆப் டாக்டர்களை, மருத்துவர் குழுவை அமைத்து, மாண்புமிகு முதல் அமைச்சருடைய உடலைப் பரிசோதிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுகிறார்கள். இப்பொழுது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை டாக்டர்கள் முறைப்படி கவனித்துக்கொண்டு வருகிறார்கள். தொடர்ந்து பல ஆண்டு காலமாகவே அவர்களைக் கவனித்து வருகிற டாக்டர்தான் அவர்களை இப்பொழுதும் கவனித்துக்கொண்டு வருகிறார். நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டு வருகிறார். பெரிய மருத்துவ மனையில், மற்ற மருத்துவர்களுடைய ஆலோசனைகளும், உதவிகளும் பெறத்தக்க முறையில் இருக்கிறது. ஆனால், போர்டு ஆப் டாக்டர்ஸ் என்று அமைத்து, அதன் மூலமாக

மருத்துவம் செய்ய வேண்டிய வாய்ப்பு, வசதி உள்ள சூழ்நிலை அவசியம் ஏற்பட்டால், மருத்துவ அதிகாரிகள் மாண்புமிகு உறுப்பினர் கூறியதன் அடிப்படையில் செயல்படுவார்கள். அவசியம் ஏற்பட்டால், அந்த நிலைக்குத் தக்கவாறு, பெரிய மருத்துவர், "டீன்" அவர்களே இந்தக் கருத்தை மனதில் கொண்டு, அவசியம் ஏற்பட்டால், தேவைப் பட்டால், அந்த வகையில் கவனிப்பார்கள் என்று கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

3. அமைச்சரின் விளக்க உரை.

அரவங்காட்டில் நடந்த துப்பாக்கிச் சூடுபற்றி நீதி விசாரணை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 82-வது விதிப்படி, அவை முன்னவர் ஒரு அறிக்கையை, பேரவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர் களே, நீலகிரி மாவட்டம் அரவங்காட்டில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூடு பற்றி 82-வது விதியின்படி அறிக்கை வைக்கப்படுகிற வாய்ப்பின் அடிப்படை யில் இந்த அறிக்கையை பேரவையின் முன் வைக்க முன்வருகிறேன்.

1—3—68 அன்று மாலை சுமார் 5 மணிக்கு நீலகிரி மாவட்டம் குன்னூர் தாலூகா, அரவங்காடு காவல் நிலையத்தின் முன்னால் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததினால் ஐந்து பேர்கள் உயிர் இழக்க நேர்ந்தது. பல ருக்கு காயங்கள் ஏற்பட்டன என்ற செய்தி மாவட்ட ஆட்சியாளர் அவர்க ளிடமிருந்து அரசினருக்கு வந்துள்ளது.

இந்தச் சம்பவம் எந்தச் சூழ்நிலையில் எப்படி நடந்தது, போலீசார் ஏன் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டி வந்தது என்பதுபற்றி மாவட்ட நீதிபதி ஒருவரால் விசாரணை செய்வது உசிதம் என்று அரசினர் கருது கின்றனர். அந்த முடிவையொட்டி விசேஷ அரசிதழ் ஒன்றில் அறிக்கைகள் வெளியிடப்பட இருக்கின்றன. அதன்படி திரு எஸ். கணே சன், மாவட்ட செஷன்ஸ் நீதிபதி அவர்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் பற்றி நீதி விசாரணை செய்யும்படி நியமிக்கப் பட்டிருக்கிறார். அவருக்கு கமிஷன் ஆஃப் எங்க்வயரி ஆக்ட்டின்கீழ் போதிய அதிகாரங்கள் அளிக்கப் பட்டுள்ளன. அவர்கள் தீர விசாரித்துத் தக்க அறிக்கை ஒன்றை அரசுக்கு வழங்கிய பின் வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

4. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

(i) அரவங்காட்டில் நடந்த துப்பாக்கிச் சூடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரவங்காட்டில் ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் பற்றி ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கு முன் அறிவிக்கைகள் வந்திருக்கின்றன. திரு. போஜன், திரு. பெள்ளி கவுடர், திரு. பொன்னப்ப நாடார், திரு. ராமமூர்த்தி, திரு. கோதண்டராமன், திரு. ஏ. கே. சுப்பையா, திரு. சுரேந்திரன், திரு. வரதராஜன், ஆகிய எட்டு உறுப்பினர் களும் ஒற்றிவைப்புத் தீர்மான முன் அறிவிக்கைகள் கொடுத்திருக்கிறார் கள். அரவங்காட்டில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூடுபற்றி விவாதிக்க, பேரவை யின் அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். இப்பொழுது, அரசினர் தரப்பில், ஒரு நீதிபதி விசாரணை நடத்த இருப்ப தாகவும், ஒரு நீதிபதியையும் நியமித்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார் கள். ஆகவே, இந்த எட்டு ஒற்றிவைப்புத் தீர்மானங்களும், பேரவையின் விதி 67-ன் கீழ் A Member must not give his opinion about, or refer to, any matter on which a judicial decision is pending, என்றிருப்பதால் நீதி விசாரணைக்குரிய காரியத்தைக் குறிப்பிடக் கூடாது ; அதைப்பற்றி கருத்தையே சொல்லவும் கூடாது என்று விதி இருப்பதால், இந்த எட்டுத் தீர்மானங்களுக்கும் அனுமதி மறுக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.